பக்கங்கள்: 10

# காலைக்கதிர்

Kālaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 பங்குனி 10 திங்கட்கிழமை 23.03.2020 கதிர் 138

**இனிது ரகசியம் அல்ல!**

முழு நாடுமே கொரோனா வைரஸ் பீதியில் உறைந்து கிடக்கையில் நான் வேறேதும் குறித்து எழுதினால் உங்களுக்குப் பெரும் எரிச்சலாக இருக்கும். ஆகவே வைரஸ் பீதி குறித்தே பேசுவோம்.

இந்த வைரஸ் பாதிப்பு 02

# யாழ்ப்பாணத்தில் போதகருடன் 180 பேர் நெருங்கி பழகியுள்ளனர்

## இராணுவத் தளபதி தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 23

சுவிஸ் நாட்டிலிருந்து வருகை தந்த மதப் போதகருடன் 150 தொடக்கம் 180 பேர் நெருக்கமான தொடர்பாடலைக் கொண்டிருந்துள்ளனர் என்று இராணுவத் தளபதியும்

கொரோனா தடுப்பு தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவருமான லெப்டினன்ட் ஜெனர் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - 02

# தனிமைப்படுத்தலுக்கு உட்படாவிடின் சிறை!

## இராணுவம் எச்சரிக்கை



கொழும்பு, மார்ச் 23

வெளிநாடுகளுக்குச் சென்று திரும்பியவர்கள் கொரோனா தனிமைப்படுத்தல் மருத் துவ கண்காணிப்புக்கு உட்படாமலிருந்தால் அவர்களுக்கு தாமாகக் கண்காணிப்புக்கு முன்வருவதற்கு 48 மணித்தியாலங்கள் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்வராதவர்கள் பாது 02

# கொரோனா நோயாளிகள் இதுவரை 81!

கொழும்பு, மார்ச் 23

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளான மேலும் ஒரு நபர் இனங்காணப்பட்டுள்ளமையை அடுத்து, இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்கானவர்களின் எண்ணிக்கை 81 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களுக்கு மேலதிகமாக தற்போதைய நிலையில் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருக்கக் 02

# வடக்குக்கு 'சீல்' வைத்தது அரசு!

## செவ்வாய் காலை வரை ஊரடங்கு நீடிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 23

வடக்கின் 5 மாவட்டங்களில் வசிக்கும் மக்கள் தமது மாவட்டங்களில் இருந்து வெளியேறுவதற்கு அரசினால் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில், அமுலில் உள்ள ஊரடங்குச் சட்டம் செவ்வாய்க்கிழமை காலை 6 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. 02

# அண்ணன் ரணிலுடன் தம்பியோ சஜித் பக்கம்!

கொழும்பு, மார்ச் 23

சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்திக்கு எதிராக போர்க்கொடி தூக்கி, ஐக்கிய தேசியக்கட்சியின் யானைச் சின்னத்தின்கீழ் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிடுகின்றார் நவீன் திஸாநாயக்க.

எனினும், அவரின் தம்பியான மயந்த திஸாநாயக்கவுக்கு சஜித் அணியின் தேசியப்பட்டியலில் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் பலகோணங்களில் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுவருகின்றன.

2015 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் கண்டி மாவட்டத்தில் களமிறங்கிய மயந்த திஸாநாயக்க, வெற்றி பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

29 பேரடங்கிய சஜித் அணியின் 02

# வடக்கு ஆளுநரின் அவசர கோரிக்கை



கொழும்பு, மார்ச் 23

சுவிஸ் நாட்டில் இருந்து வருகை தந்த மதபோதகரின் தலைமையில் நடைபெற்ற ஆராதனை மற்றும் நிகழ்வுகளில் பங்கேற்றவர்களை உடனடியா தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்துவதுடன் தங்களது விவரங்களை அருகில் உள்ள பொதுச் சுகாதார உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் கேட்டுள்ளார்.

தவறும் பட்சத்தில் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை 02

# ஆராதனையில் பங்கேற்ற இருவர் வவுனியா வைத்தியசாலையில்!

வவுனியா, மார்ச் 23

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சுவிஸ் மதபோகரின் ஆராதனையில் கலந்துகொண்டவர்களில் இருவர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் போதனையில் ஈடுபட்ட மதபோதகருக்கு கொரோனா தொற்று இருப்பதாக தெரிவிக்கப்பட்ட நிலையில் வவுனியாவில் 02

# அ'புரம் சிறையிலிருந்து அரசியல் கைதிகளை யாழுக்கு மாற்றுவார்கள்

## முன்னாள் எம்.பி. சார்ள்ஸ்க்கு சிறை அத்தியட்சகர் உறுதியாம்

அநுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள அரசியல் கைதிகளை அவர்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு அவர்களை யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு மாற்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிரமலநாதன் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரி 02

# உணவுப் பொருள் ஏற்றிய வாகனங்களுக்கு அனுமதி



கொழும்பு, மார்ச் 23

ஊரடங்கு சட்டம் அமுலில் உள்ள நேரத்தில், பொருளாதார மத்திய நிலையங்களுக்கு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களைக் கொண்டு செல்லும் வாகனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (ஐ)

காலைக்கதிர் Kalaikathir



## அ'புரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்கையில்,

அநுராதபுரம் சிறைச்சாலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை இடம் பெற்ற அசம்பாவிதத்தை தொடர்ந்து அந்தச் சிறைச்சாலையில் உள்ள அரசியல் கைதிகளின் பெற்றோர் விடுத்த வேண்டுகோளுக்கு அமைய ஞாயிற்றுக்கிழமை காலை அநுராதபுரம் சிறைச் சாலைக்கு சென்றிருந்தேன்.

அரசியல் கைதிகளின் பாதுகாப்பு தொடர்பாக சிறைச்சாலை அத்தியட்சகருடன் கலந்துரையாடினேன்.

இதன் போது சிறைச் சாலையில் உள்ள 11 அரசியல் கைதிகளும் பாதுகாப்பாக இருக்கின்றனர் எனச் சிறைச்சாலை அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

அந்தச் சிறைச்சாலையில் பாதுகாப்பு இல்லை என்றால் உடனடியாக மகசின் சிறைச்சாலைக்கோ அல்லது யாழ்ப்பாணம் சிறைச் சாலைக்கோ அந்த அரசியல் கைதிகளை மாற்றும்படி கேட்டுக்கொண்டேன்.

அவர்களுக்குப் பாதுகாப்பு இருப்பதாகவும் பாரதூரமான நிலைகள் ஏற்படுமாயின் அது தொடர்பாகக் கவனம் செலுத்தப்படும் என சிறைச்சாலை அத்தியட்சகர் தெரிவித்தார்.

உலகம் பூராகவும் கொரோனா தொற்றின் காரணமாக சிறைச்சாலையில் உள்ள அரசியல் கைதிகள் அச்சம் அடைந்துள்ளனர்.

அரசாங்கம் சிறைக்கைதிகள் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும். கைதிகள் எவருக்கேனும் கொரோனா தொற்று ஏற்படும் என்றால் அதற்கான முழுப்பொறுப்பையும் அரசாங்கம் ஏற்க வேண்டும். உடனடியாக சிறைச்சாலை ஆணையாளருடன் தொலைபேசியில் உரையாடி 11 அரசியல் கைதிகளின் பாதுகாப்பின்மை தொடர்பாக விளங்கப்படுத்தி அவர்களை யாழ்பாணம் சிறைச்சாலைக்கு மாற்றம் செய்யும் படி கேட்டுக்கொண்டேன்.

உடனடியாக 11 தமிழ் அரசியல் கைதிகளையும் யாழ்ப்பாணம் சிறைச் சாலைக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார். - என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

## யாழ்ப்பாணத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரியாலை கண்டி வீதியில் அமைந்துள்ள பிலதெல்பியா தேவாலயத்தில் கடந்த மார்ச் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சிறப்பு ஆராதனை இடம்பெற்றுள்ளது.

இந்த ஆராதனையை சுவிஸ் நாட்டிலிருந்து வருகை தந்த போதகர் நடத்தியுள்ளார். சுவிஸுக்கு திரும்பிய நிலையில் அவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், அவரைச் சந்தித்திருந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவருக்கும் கொரோனா தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட போதகருடன் 150 தொடக்கம் 180 பேர் நெருக்கமான தொடர்பைப் பேணியுள்ளனர். அவர்கள் தொடர்பில் விசாரணைகள் இடம்பெறுகின்றன என்று இராணுவத் தளபதி மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-07)

## ஆராதனையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்து அந்த நிகழ்வுக்குச் சென்ற எட்டு பேர் தனிமைப்படுத்தப்பட்டுக் கண்காணிக்கப்பட்டு வந்தனர்.

இவர்களில் நெளுக்குளத்தைச் சேர்ந்த ஒருவரும் புளியங்குளத்தைச் சேர்ந்த ஒருவருமாக இருவருக்கு உடலில் உபாதைக் குணம் இருப்பதை அறிந்து பொது சுகாதாரப் பரிசோதகர்களுக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் அவர்களை உடனடியாக வவுனியா வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். (ஐ)

## அண்ணன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய பட்டியலில் 4 முன்னாள் அமைச்சர்கள், மூன்று 3 பிரதி,இராஜாங்க அமைச்சர்கள், 2 முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களும் உள்ளடங்கியுள்ளனர்.

அதேவேளை, சஜித், ரணில் ஆகிய இரு தரப்புகளையும் இணைப்பதற்கு பாடுபட்ட முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய இம்முறை தேர்தலில் போட்டியிடவில்லை.

கடந்த முறை அவருக்கு தேசியப்பட்டியல் ஊடாக வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தது.

இம்முறை சஜித், ரணில் என இரு தரப்புகளிலும் அவரின் பெயர் உள்வாங்கப்படவில்லை. கரு ஜயசூரியாவின் மருமகன் நவீன் திஸாநாயக்கா என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தனிமைப்படுத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காப்புப் படையினரால் இனங்காணப்பட்டால் 3 வருடச் சிறை தண்டனைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய வெளிநாடுகளிலிருந்து வருகை தந்தவர்கள் நாளை செவ்வாய்க்கிழமை நள்ளிரவு 12 மணிக்கு முன்னர் பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் அல்லது அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில் முன்னிலையாகுமாறு கோரப்பட்டுள்ளது.

அதன் பின்னர் அந்த நபர்கள் 14 நாட்கள் தனிமைப்படுத்தல் மருத்துவக் கண்காணிப்பிற்கு உட்படுத்தப்படுவர். வெளிநாடுகளிலிருந்து வருகை தந்து கண்காணிப்புக்கு உட்படாமலிருப்பவர்களுக்கு இதுவே இறுதி வாய்ப்பாகும்.

இதேவேளை இந்த அறிவித்தலை கவனத்தில் கொள்ளாதவர்கள் பொதுமக்களின் ஒத்துழைப்புடன் பாதுகாப்புத் துறையினரால் இணங்காணப்பட்டு மருத்துவக் கண்காணிப்பு மற்றும் தொற்று நோய் அகற்றல் சட்டத்தின் கீழ் 3 வருடங்கள் சிறைத் தண்டனைக்கு உட்படுத்தப்படுவார்கள். அத்தோடு 14 நாட்கள் சிறைச்சாலை வைத்தியசாலையில் தனிமைப்படுத்தப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## வடக்குக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மாவட்டங்களில் செவ்வாய் காலை 6 மணிக்கு நீக்கப்படும் ஊடரங்கு சட்டம் பிற்பகல் 2 மணிக்கு மீண்டும் அமுல்படுத்தப்படும்.

அதேவேளை, வடக்கின் 5 மாவட்டங்களில் வசிக்கும் மக்கள் தமது மாவட்டங்களில் இருந்து வெளியேறுவது தடை செய்யப்பட்டுள்ளது.

அரியாலை கண்டி வீதியில் அமைந்துள்ள பிலதெல்பியா தேவாலயத்துக்கு சுவிஸ் நாட்டிலிருந்து வருகை தந்த போதகரை சந்தித்த மற்றும் போதனையில் கலந்துகொண்ட அனைவரையும் இனங்காணும் வரை இந்தப் பயணத் தடை நீடிக்கப்படும்.

இந்த 5 மாவட்டங்களில் வசிக்கும் மக்களை கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து பாதுகாக்கும் பொருட்டு இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வடக்கின் வசிக்கும் மக்களை பாதுகாக்கும் நோக்கில் அரசாங்கம் மேற்கொண்டுள்ள இந்த நடவடிக்கைக்கு வடக்கின் அனைத்து மக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அரசு பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (ஐ)

## கொரோனா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூடும் என்ற சந்தேகத்தின் பேரில் 245 பேர் நாடு முழுவதும் உள்ள 18 வைத்தியசாலைகளில் மருத்துவக் கண்காணிப்பில் உள்ளனர் என தொற்றுநோய் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த நாட்டில் அமைக்கப்பட்டுள்ள 22 கண்காணிப்பு தனிமைப்படுத்தல் நிலையங்களில் 3,063 பேர் தற்போதைய நிலையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என கொரோனா வைரஸைத் தடுக்கும் செயற்பாட்டுக் குழு குறிப்பிட்டுள்ளது.

வெளிநாட்டவர்கள் 31 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களுக்கு இடையில் உள்ளனர் என அந்த மையம் தெரிவித்துள்ளது.

இதற்கு மேலதிகமாக சுகாதார பிரிவு, புலனாய்வுப் பிரிவு, இராணுவம், பொலிஸ் மற்றும் பொது சுகாதார பரிசோதகர்களால் இனங்காணப்பட்ட ஆயிரக்கணக்கானவர்கள் சுயதனிமைப்படுத்தல் நடவடிக்கையின் கீழ் உள்ளனர். (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் விடயங்கள் குறித்து அதிகாரிகளுக்கு அறிவிப்பதற்காக ஒரு தொலைபேசி இலக்கம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தினால் இரண்டு நாள்களுக்கு முன்னரே வெளியிடப்பட்டது. குடாநாட்டின் சகல ஊடகங்களும் தமது வெளியீடுகளில் முக்கியத்துவம் கொடுத்து அந்த இலக்கத்தைப் பிரசுரித்தன. அது அலுவலகத் தொலைபேசி இலக்கம்.

இதேபோல யாழ் போதனா ஆஸ்பத்திரியும் இரண்டு தொலைபேசி இலக்கங்களைக் கொடுத்திருந்தது. ஒன்று அலுவலகத் தரை வழி இணைப்பு. மற்றது கைத்தொலைபேசி.

கொரோனா பரவல் கட்டுப்படுத்தல் விடயத்தில் இரண்டு அம்சங்கள் உள்ளன.

ஒன்று – நோய்த் தடுப்பு (Preventive). மற்றது – நோய் தீர்த்தல் (Curative).

நோய்த் தடுப்பு, பரவுதலைத் தவிர்த்தல் போன்றவற்றைக் கையாள வேண்டியது பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தைச் சார்ந்தது. இன்றைய நெருக்கடிச் சூழலில் கொரோனா வைரஸ் பரவல் கட்டுப்படுத்தலில் அதன் கடமையும் பொறுப்பும் அதீதமானவை. மிக முக்கியமானவை.

யாழ் போதனா வைத்தியசாலையைப் பொறுத்தவரை அதன் பங்கு பணியில் பிரதானமானது நோயுற்று வருபவர்களை நோயினின்றும் மீட்டும் சிகிச்சை அளித்தலும் நோய்த் தீர்தலும் ஆகும்.

இந்த இரண்டு தரப்புகளினதும் தரைத் தொலைபேசிகளும், இவ்வளவு முக்கியத்துவத்துடன் முன்னறிவிப்புக் கொடுத்து பகிரங்கப்படுத்திய பின்னரும் கூட மாலை 6 மணிக்கு பின்னர் படுத்து விடுகின்றன. பதிலளிக்க எவருமில்லை.

நாட்டையும், யாழ் குடாநாட்டையும் உலுப்பிப் போட்டிருக்கும் கோரோனாவால், முழு நாடுமே பதறியடித்துக் கொண்டிருக்கையில் சுகாதாரப் பிரிவு மக்கள் தொடர்பாடலுக்குக் கொடுத்த தொலைபேசியை மாலை 6 மணி முதல் அடுத்த நாள் காலை 7 மணி வரை கையாள முடியாவிட்டால் – அதுவும் இந்த ஊரடங்கு சமயத்தில் இப்படிப் பகிரங்கமாக அவசரதேவைக்கு மக்கள் தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப்பட்ட தொலைபேசியை – அலுவலகத் துக்குள் தூக்கி வைத்து மூடிவிட்டு அதிகாரிகள் வீட்டுக்குள் போய்த் தூங்கலாம் என்றால், அது போன்ற மிகப் பெரும் குற்றம் – பேரவலம் – நமக்கு வேறில்லை.

சரியோ, பிழையோ யாழ் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் கொடுத்த இரண்டு இலக்கங்களில் கைத்தொலைபேசியில் நள்ளிரவு 12 மணிக்கும் ஒரு டாக்டர் காத்திருந்து பதிலளித்தமையை எண்ணும் போது மனம் திருப்தியுற்றது.

கொரோனா தொற்று இவ்வளவு தூரம் குடாநாட்டை உலுப்பும் நிலைமை வந்த பின்னரும் சுகாதார அதிகாரிகள் தூங்கி விட்டு சம்பளம் எடுக்கலாம் என்ற மெத்தனத்தில் இருக்கக் கூடாது.

★ ★ ★

இப்போது யாழ்ப்பாணத்தில் கொரோனா தொற்று உள்ளவர் என அடையாளம் காணப்பட்டவர் ஒரு கட்டட ஒப்பந்தகாரர். யாழ் பண்ணையில் உள்ள மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் கடந்த வெள்ளியன்று வந்து நின்று பத்துக்கும் மேற்பட்ட பைப் 'ரப்'புகளைத் திருத்திப் பூட்டிக் கொடுக்கும் பணியை மேற்பார்வை செய்திருக்கின்றார். சுமார் மூன்று மணி நேரம் அங்கு செலவிட்டிருக்கின்றார்.

இதனால், பீதியில் உறைந்து கிடக்கின்றனர் அந்த அலுவலகத்தின் ஊழியர்கள். அவர்களில் பலர் ஏற்கனவே சுயதனிமைப் படுத்தலுக்குச் சென்று விட்டனர் என்றும் தகவல்.

இதே போல இந்த நோயாளி வெள்ளியன்று மாலை கடும் காய்ச்சலுடன் தாவடிப் பக்கத்தில் ஒரு கோயிலைக் கழுவிச் சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டிருந்திருக்கின்றார். கோவிலின் நிர்வாக சபைக் கூட்டத்தில் பங்குபற்றியிருக்கின்றார். இதனால் அந்தக் கூட்டத்தில் பங்குபற்றிய எல்லோரும் இப்போது அச்சத்தின் உச்சியில்.

இந்த நோயாளியின் படங்கள் முகப்புத்தகங்களிலும், இணையத்திலும் தாராளமாகப் புழங்க விடப்பட்டுள்ளன. அப்படி நோயாளியின் படத்தை வெளியிடுகின்றமை சட்டப்படி சரியாக இருக்கலாம். தார்மீக ரீதியில் தவறானது.

ஒரு நோயாளியின் படத்தை இவ்வளவு தூரம் நாம் பிரசாரப்படுத்தினால், இனி எந்த நோயாளியும் தம்மைத் தாமே சுயமாக முன்னிலைப்படுத்தி சிகிச்சை பெற வரவே மாட்டார்.

இது விடயத்தில் சமூகம் திருந்தினால் நாடு உருப்படும். திருந்துமா சமூகம்?

- மின்னல் -

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுக்கப்படும் என்றும் ஆளுநர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் ஆளுநரின் ஊடகப் பிரிவு அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு: -

சுவிஸ் நாட்டில் இருந்து வருகை தந்த மதபோதகருக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருப்பது வெளியுறவு அமைச்சின் ஊடாக உறுதி செய்யப்பட்டுள்ளது என வடக்கு மாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார்.

மேற்படி சுவிஸ் நாட்டில் இருந்து இந்த மாதம் பத்தாம் திகதி காலை வருகை தந்த 61 வயதுடைய சுவிஸ் குடிமகனான மதபோதகர் சிவராஜ் போல் சற்குணராஜா, அரியாலை கண்டி வீதியில் அமைந்துள்ள பிலதெல்பியா தேவாலயத்தில் சிறப்பு ஆராதனை நிகழ்விலும் வேறு சில நிகழ்வுகளிலும் பங்குபற்றியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பின்னர் இம்மாதம் 16ஆம் திகதி மீண்டும் தனது நாட்டுக்குச் சென்ற பின்னர் அங்கு அவருக்கு கொரோனா வைரஸ் இருப்பது உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

தற்போது சுவிஸ்சர்லாந்தின் பேண் நகரில் உள்ள இன்செல்ஸ்பிற்றல் பல்கலைக் கழக வைத்தியசாலையில் கொரோனா வைரஸ் தாக்கத்துக்கான சிகிச்சையை அவர் பெற்று வருகிறார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இந்த போதகரின் தலைமையில் நடைபெற்ற ஆராதனை நிகழ்வுகளில் பங்கெடுத்த அனைவரும் தங்கள் வீடுகளில் உடனடியாகத் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்துவதுடன் தங்களது விவரங்களை அருகில் உள்ள பொதுச் சுகாதார உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் வேண்டுகிறோம். தங்களுடையதும் தங்களைச் சார்ந்தவர்களதும் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியது மிக அவசியமானதென்றாகும் - என்றுள்ளது.

# பண்டாரவளையில் குப்பைமேட்டில் தீ!



பண்டாரவளை, எல்ல பிரதேச சபைக் குட்பட்ட பகுதியில் சுமார் இரண்டு ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள குப்பை மலையில் ஏற்பட்டுள்ள தீப்பரவலை கட்டுப்படுத்து வதற்கு பொலிஸாரும், தீயணைப்பு படை யினரும் தொடர்ந்தும் போராடி வருகின் றனர்.

மலைபோல் குப்பைகள் குவிக்கப் பட்டுள்ள, இந்தக் குப்பை மேட்டில் நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் – ஊரடங்கு வேளையில் தீடீரென தீ விபத்து ஏற்பட்டு தீப்பரவல் வேகமாக பரவ ஆரம் பித்தது.

இது தொடர்பில் எல்ல பிரதேச சபைத் தலைவருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து அவர் ஊடா கப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டு, சம்பவ இடத்துக்கு அவர் கள் வரவழைக்கப்பட்டனர்.

சுமார் மூன்று மணிநேரம் கடும் பிரயத் தனங் களுக்கு மத்தியில் தீ 90வீதம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டி ருந்தாலும், சற்று நேரத்தின் பின்னர் மீண்டும் தீப்பரவல் ஏற்பட்டு வேகமாக பரவியது. இதனால் அப்பகுதி புகைமண்ட லமாக காட்சியளிக்கின்றது.

எல்ல பிரதேச சபையில் தீயணைப்பு வாகனம் இன்மையால், நேற்று பண்டார வளை மற்றும் பது ளையில் இருந்து தீயணைப்பு வாகனங்கள் வர வழைக் கப்பட்டன.

பொலிஸாரும், தீயணைப்பு படையி னரும் இணைந்து தீயைக் கட்டுப்படுத் தும் நடவடிக்கை யில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றனர்.

பாதுகாப்பற்ற நிலையிலேயே இக் குப்பை மேடு காணப்பட்டுள்ளமையுடன், உக்காத பொருள்களும் அதிகளவு இருந் துள்ளன.

# மடு, நானாட்டானில் 11 குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டன எனத் தகவல்

மன்னார்,மார்ச்23

மடு மற்றும் நானாட்டான் பிரதேசங்களில் 11 குடும்பங் கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

சுவிஸ் நாட்டிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தி ருந்த போதகர் ஒருவரின் ஆராதனைக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் என்னும் சந்தேகத்தில் குறித்த 11 குடும்பங் களும் அவர்களது வீடுகளிலேயே தனிமைப்படுத்தப்பட் டுள்ளன எனத் தெரிவிக்கப்படு கின்றது.

சுவிஸ் நாட்டில் இருந்து வருகை தந்த போதகர் ஒருவர் கடந்த 15 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் மத போதனைக் கூட்டம் ஒன்றை நடத்தியுள்ளார்.

அந்தப் போதகர் மீண்டும் சுவிஸ் நாட்டிற்குத் திரும் பிச் சென்ற நிலையில் அந்தப் போதகருக்கு 'கொரோனா' நோய்த் தொற்று உள்ளது எனக் கண்டுபிடிக்கப்பட் டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் இருந்தும் பலர் அந்த கூட் டத்தி ற்கு சென்றுள்ளார்கள் என்று சுகாதார துறையி னருக்கு கிடைத்த தகவல்களின் அடிப்படையில் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உற்பட்ட மடுக்கரை மற்றும் அச் சங்குளம் கிராமங்களில் 5 குடும்பங்களும், மடுப்பிரதேச செயலகத்திற்கு உற்பட்ட தேக்கம் கிராமத்தில் 6 குடும்பங் களும் அடையாளம் காணப்பட்டன. அதனையடுத்து அவர் களை அவர்களது வீட்டிலேயே தனிமைப்படுத்தும் நடவடிக் கைகளை சுகாதார பிரிவினர் மேற்கொண்டுள்ளனர்.


இந்த 11 குடும்பங்களும் அவர்களுடைய வீடுகளிலே தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர் என நானாட்டான் பொது சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.


அவர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளின் போது அவர்கள் அந்த கூட்டத்தில் தாம் கலந்து கொள்ள வில்லை எனத் தெரிவித்துள்ளனர்.

எனினும் பாதுகாப்பை கருத்தில் கொண்டு மேற்படி 11 குடும்பத்தினரும் அவர்களுடைய வீடுகளில் தனிமை படுத்தி வைக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர்களுக்கான மருத்துவம், சுகாதாரம், உலர் உணவு வசதிகளும் மேற்கொள்ளப்பட் டுள்ளன எனவும் நானாட்டான் பொது சுகாதார வைத்திய அதிகாரி மேலும் தெரிவித்தார்.

# ரத்ன தேரர், ஞானசாரர் வேட்புமனுக்கள் 'அவுட்'!

## நீதிமன்றை நாடுகின்றார்களாம்





தமக்கு எதிராக திட்டமிட்ட வகை யில் அரசியல் சூழ்ச்சிகள் முன்னெ டுக்கப்படுகின்றன முன்னாள் நாடா ளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர் தெரிவித்தார்.

'அபே ஜன பலவேகய' கட்சி யின் ஊடாக பொதுத்தேர்தலில் போட்டியிட தீர்மானித்துத் தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்கள் நிரா கரிக்கப்பட்டமை தொடர்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட் டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

குருநாகல், மொனராகலை உள்ளிட்ட பிரதேசங்களில் போட் டியிடுவதற்காக சமர்ப்பிக்கப் பட்ட வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட் டுள்ளன. இதற்கான உரிய கார ணிகள் இதுவரை அறிவிக்கப் படவில்லை. இந்த செயற்பாட் டுக்கு எதிராக நீதிமன்றில் வழக் குத் தாக்கல் செய்ய தீர்மானித் துள்ளேன். நிச்சயம் எமக்கு நீதி கிடைக்கப்பெறும்.

பொதுஜன பெரமுனவுடன் இணைந்து பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்கு தீர்மானித்தேன். ஆனால் ஜனாதிபதி தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதி கள் நிறைவேற்றப்படவில்லை.

பெற்றுக்கொள்ளப்பட்ட மக்க ளாணை திசைதிரும்பி செல்லப் படுவதை உணர்ந்து பொதுத் தேர்தலில் தனித்து – அதாவது புதிய கட்சியின் ஊடாக – போட்டியிட தீர்மானித்தேன். எமது கட்சியில் பொதுபல சேனா அமைப்பின் தலைவர் ஞானசார தேரரும் இணைந்து கொண்டார்.

பௌத்த மதகுருமார்கள் நாடா ளுமன்றத்திற்கு தெரிவு செய்யப் படக்கூடாது என்ற தவறான நிலைப் பாட்டை சமூகத்தின் மத்தியில் தோற்றுவிக்க முயற்சிக்கின்றார் கள். பௌத்த மதம், புராதான தொல்பொருள்கள் மற்றும் இடங் கள் பாதுகாக்கப்பட வேண்டுமா யின் நிச்சயம் பௌத்த மத குரு மார்கள் நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட வேண்டியது அவசியம்.– என்றார்.

# இராணுவ சோதனை நிலையங்களால் சூழப்பட்டது முல்லைத்தீவு மாவட்டம்!

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு செல் லும் வழிகள் அனைத்திலும் பொலிஸ் மற்றும் இராணுவ சோதனை நிலையங் கள் அமைக்கப்பட்டுள்ளன.

பரந்தன் ஊடாக முல்லைத்தீவு செல் லும் வழியில் தேராவில் பகுதியில் ஒரு சோதனை நிலையமும், திம்புலி சந்தி பகுதியில் மற்றொரு சோதனை நிலை



யமும் அமைக்கப்பட்டுள்ளன.

அத்துடன், நெடுங்கேணி ஊடாக ஒட்டுசுட்டான் வீதி வழியாக செல்லும் வீதி யில் ஒரு சோதனை நிலையமும், மன் னாகண்டல் பகுதியிலும், மாங்குளம் – ஒட்டுசுட்டான் வீதியிலும், முள்ளிய வளை – முல்லைத்தீவு வீதியிலும், வட்டு வாகல் – முள்ளிவாய்க்கால்,நாயாறு வீதிகளிலும் படையினர் மற்றும் பொலிஸ் சோதனை நிலையங்கள் அமைக்கப் பட்டு படையினர் வீதியால் செல்பவர்களை பதிவு செய்தே செல்ல அனுமதித்து வருகின்றார்கள்.

# ஊரடங்கு வேளையில் மது விற்றவர் சிக்கினார்

ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் இருந்த சமயம் சட்டவிரோதமாக அதிக விலையில் மதுபான போத்தல்களை விற் பனை செய்த ஒருவரை நேற்று முன்தினம் தாம் கைது செய்துள்ளனர் என நாவலப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

நாவலப்பிட்டி பொலிஸாருக்குக் கிடைக் கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே இந்த நபர் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர் 45 வயதுடையவர் என்றும் தெரிவிக் கப்பட்டது. கைது செய்யப்பட்ட நபரை நாவ லப்பிட்டி நீதிவான் முன்னிலை யில் ஆஜர் படுத்துவதற்கான நடவடிக் கையை நாவல பிட்டி பொலிஸார் மேற் கொண்டிருந்தனர்.

# கரு உட்பட ஆறு முன்னாள் எம்.பிக்களுக்கு இந்தத் தேர்தலில் இடமளிக்கப்படவில்லை

கொழும்பு,மார்ச் 23

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆறுபேர் வேட்பு மனு தாக்கல் செய்யவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் அவர்கள் கட்சிகளின் தேசிய பட்டியலிலும் இடம்பறவில்லை.

முன்னாள் சபாநாயகர் கருஜெயசூரிய, சாகல ரத்னா யக்க, நிசாந்த முத்துஹெட்டிகம,மயந்த திஸநாயக்க, வசந்த சேனநாயக்க மற்றும் எஸ்.பி நாவின்ன ஆகி யோரே அவர்களாவர்.

ஐக்கிய தேசிய கட்சி இரண்டாக பிளவுபட்டதனால் எதிர்வரும் தேர்தலில் போட்டியிடுவதில்லை என முன் னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய முடிவெடுத்துள்ளார்.

அதேபோன்று சாகல ரத்னாயக்க போட்டியிடுவதற்கு கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.

மயந்த தேர்தலில் போட்டியிடுவதில்லை என முடிவு செய்துள்ளார்.

இதேவேளை நிசாந்த முத்துஹெட்டிகமவிற்கு பொதுஜனபெரமுனவிலிருந்து வேட்புமனு தாக்கல் செய்வதற்கான அனுமதி கிடைக்கவில்லை.இவர் காலி மாவட்டத்தில் போட்டியிடுவதற்கு எதிர்பாரத்திருந்தார்.

தேர்தல் ஆணையகத்தின் தகவல்களின்படி அங் கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளில் இருந்து 3652 வேட் பாளர்களும் சுயேச்சைக்குழுக்களில் இருந்து 3800 வேட்பாளர்களும் என மொத்தம் 7452 பேர் எதிர்வரும் தேர்தலில் போட்டியிடவுள்ளனர்.

கொழும்பு மாவட்டத்திலேயே அதிகளவான வேட் பாளர்கள் போட்டியிடுகின்றனர்.அதாவது 924 வேட் பாளர்கள் போட்டியிடுகின்றனர். இவர்களில் 352 பேர் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளில் இருந்தும் 572 பேர் சுயேச்சைக்குழுக்களில் இருந்தும் போட்டியிடு கின்றனர்.

காலைக்கதிர்
Kalaikathir



# விதண்டாவாதத்தை விட்டொழித்து ஒத்துழைப்போம்!

கொரோனா வைரஸ் தாக்கம் சில நாள்க
ளுக்கு முன்னர் வரைக்கும் வடக்கு வாழ் மக்
களுக்கு ஒரு நகைச்சுவையாக இருந்தது.
உலகின் பல நாடுகளிலும் இந்த வைரஸ் அச்
சுறுத்தல் காரணமாக மக்கள் பயப் பீதிக்குள்
ளாகி பொருள்களையும் கழிவறைக் கடதாசிக
ளையும் வாங்கிக் குவித்தபோது அது ஒரு
வேடிக்கை விளையாட்டாக இருந்தது. ஓழப்போய்
பெற்றோலை அடித்து வைப்போம் என்பதற்கு
மேல் வடக்கு மக்கள் அதற்கு அதிகம் முக்கியத்
துவம் கொடுக்கவில்லை.

அடுத்த கட்டமாக இலங்கையில் கொரோனா
நோயாளிகள் கண்டறியப்படத் தொடங்கிய
தும்தான் நிலமையின் வீரியம் வடக்கு மக்க
ளுக்கும் சற்று உறைக்க ஆரம்பித்தது. அப்
போதும் நிலமையின் முழுமையான வீரியத்தை
அவர்கள் உணர்ந்து கொண்டவர்களாகத்
தெரியவில்லை.

ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்
பட்டு மக்கள் வீடுகளுக்குள் முடங்கி
யிருக்கும்படி கேட்கப்பட்ட நிலையி
லும் உள்பாதை கள் வழியாக நட
மாடித் திரிவதையும் அயல் வீட்டவர்
களோடு உறவாடல்களை வைத்தி
ருப்பதையும் வடக்கு மக்கள் கைவிட
வில்லை. கொரோனா எங் களை
அண்டாது என்கிற ஒருவித தான்
தோன்றித்தனத்துடனான அணுகு
முறையே வடக்கு மக்களிடம் இருந்
தது.

யாழ்ப்பாணத்திற்குள்ளும்
கொரேனா வந்திருக்கக்கூடும் என்கிற சந்தேகம்
எழுப்பப்பட்ட போதுதான் மனதின் அடி ஆழத்தில்
ஒரு சிறு அச்சம் குடிகொள்ளத் தொடங்கியது.
ஆனா லும் அதுகூட முழுமையான ஒரு விழிப்பு
நிலை என்று சொல்லிவிடுவதற்கில்லை. என்
றாலும் நிலைமை மேம்பட்டிருக்கிறது. நேற்று
மாலை யில்தான் மீண்டும் வானொலிகளை
எடுத்து செய்திகளை மக்கள் முடுக்கி விடுவ
தைக் கேட்க முடிந்திருக்கின்றது.

இவை எல்லாவற்றினதும் விளைவாகவும்
இதோ இப்போது கொரோனா என்கிற கொவிட்
19 வைரஸ் ஒவ்வொருவரது வீட்டுக் கதவையும்
தட்டிக்கொண்டிருக்கிறது. கொரோனா தொற்று
யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவருக்கு ஏற்பட்டி
ருக்கின்றது என்பது சோதனைகளின் பின்னர்
உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

சுவிஸ் நாட்டில் இருந்து வந்திருந்த மத
போதகர் ஒருவர் மூலம் இந்தத் தொற்று தாவ
டியைச் சேர்ந்த மேற்படி நோயாளிக்கு ஏற்பட்டி
ருக்கலாம் என்று கண்டறியப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் இப்போது கண்டறியப்பட்டி
ருப்பதும் ஏற்பட்டிருப்பதும் மிகவும் இக்கட்டான,
சிக்கலான பாதிப்பு நிலை. இதனை அனை
வரும் நன்கு புரிந்துகொள்ளவேண்டும்.

கொரோனா வைரஸ் பரம்பரை உலக சுகா
தார நிறுவனம் 4 கட்டங்களாக வகுத்துள்ளது.
முதலாவது கட்டம் நோய்ப் பரம்பல் உள்ள நாடு
களில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட நிலை.
இந்த நிலையில் நோய்த் தொற்றுள்ள வெளி
நாடுகளில் இருந்து திரும்பி வந்தவர்களிடம்
மட்டும் வைரஸ் தொற்று கண்டறியப்படும்.

இரண்டாவது கட்டம் தொற்றுக்குள்ளான
நபரிடம் இருந்து உள்ளூர்வாசிகளுக்கு தொற்று
ஏற்படும் நிலை. அதாவது தொற்றுக்குள்ளான
நாட்டில் இருந்து திரும்பி வந்தவரின் குடும்பத்
தவர்கள் மற்றும் அவருடன் மிக நெருக்கமா
னவர்களுக்குத் தொற்றுக் கண்டறியப்படும்
நிலை.

இந்த உள்ளூர் பரவல் நிலையில் குறைந்தள
வினருக்கே வைரஸ் தொற்று ஏற்பட வாய்ப்புகள்
உண்டு. வைரஸ் எங்கிருந்து யாரிடமிருந்து
எப்படி பரவியது என்பதை இந்த நிலையில்
கண்டறிவது இலகு. இந்தச் சங்கித் தொடரைக்
கண்டறிவதும் இலகு. சமூகப் பரவல் நிலையி
லிருந்து வேறுபட்டது இது. ஒருவகையில் கூறி
னால் பாதிப்புக் குறைந்தது.

மூன்றாவது நிலை என்பது சமூகப் பரவல்
நிலை. இந்த நிலையில் பெரும் நிலப்பரப்பில்
பாதிப்பு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் விரிவாகி
யிருக்கும். ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட
எந்தவொரு நோயாளியுடனும் நேரடியாகத்
தொடர்புபடாதவராகவோ நோய்த் தொற்று
உள்ள நாடுகளில் எவற்றுக்கும் பயணப்படாத
வராகவோ இருக்கும் நபருக்கு நோய்த் தொற்று
ஏற்படும் நிலையே மூன்றாவது நிலை.

இந்த நிலையில் தொற்றுக்குள்ளான நபர்
எங்கிருந்து தொற்றைப் பெற்றார் என்பதை
அடையாளப்படுத்த முடியாதிருக்கும்.

நான்காவது நிலை என்பது பரவல் கட்டுமீறி
எப்போது முடிவுக்கு வரும் என்பது தெரியாதி
ருக்கும் அவலத்தைக் குறிக்கும்.

இலங்கை இதுவரையில் 2ஆம் நிலைத்
தொற்றுக்குள்ளேயே இருந்துவந்தது. ஆனால்,
யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்திருக்கக்கூடிய சம்
பவம் நிலைமை 3ஆம் நிலையான சமூகப் பர
வலுக்குள் சென்றுவிடுமோ என்கிற அச்சத்தை
ஏற்படுத்தியுள்ளது.

ஏனெனில் யாழ்ப்பாணத்தில் நடந்ததாகக்
கூறப்படும் சமய நிகழ்வில் வேறு பல மாவட்
டங்களைச் சேர்ந்தவர்களும் யாழ். மாவட்டத்
திற்குள்ளேயே பல்வேறு இடங்களைச் சேர்ந்த
வர்களும் கலந்துகொண்டிருந்திருக்கிறார்
கள். அவர்களில் பலர் நோய்ப் பரவலுக்கான
மூலகாரணியாகக் கருதப்படும் மதபோதகருடன்
நேரடித் தொடுகையையும் கொண்டிருந்திருக்
கிறார்கள் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

இப்போது தொற்று உறுதிப்படுத்தப்பட்டவரும்
அதே போதகருடன் 14ஆம் திகதி நெருக்க
மாக அமர்ந்திருந்த ஒருவர் என்பது உறுதிப்படுத்
தப்பட்டிருக்கின்றது. இவரும் கூட 20ஆம் திகதி
வைத்தியசாலையில் சேர்க்கப்படும் வரை சமூ
கத்தில் சுதந்திரமாக நடமாடியிருக்கிறார். பல
இடங்களுக்குச் சென்றும் வந்திருக்கிறார்.

எனவே போதகரின் நிகழ்வில் பங்கேற்ற
வர்களில் எத்தனைபேருக்கு தொற்று ஏற்பட்டது
என்று தெரியாது, அதேநேரம் அவர்கள் மூலம்
வேறு யார் யாருக்கெல்லாம் தொற்று ஏற்பட்டி
ருக்க முடியும் என்பதைக் கூடிய விரைவில்
கண்டறிவதும் இலகுவான காரியமல்ல.

இத்தகையதொரு நிலை வடக்கை மூன்றாம்
நிலைத் தொற்றுக்குள் தள்ளிவிடுவதற்கான
ஏதுநிலைகள் அதிகம் உள்ளன.

இலங்கை 2ஆம் நிலைத் தொற்றை எட்டிய
போதே வைரஸ் தொற்றைத் தடுத்து நிறுத்த
மூர்க்கத்தனமான நடவடிக்கைகள் அவசியம்
என்று உலக சுகாதார நிறுவனம் இறுக்கமா
கத் தெரிவித்திருந்தது.

அப்படியிருக்கும்போது வடக்கில் மூன்றாம்
நிலைத் தொற்று ஒன்று ஏற்படும் ஏதுநிலையில்
மேலும் இறுக்கமான, மூர்க்கமான நடவடிக்
கைகள் மிக அவசியம். அரசின் இத்தகைய
நடவடிக்கைகளுக்கு அனைவரும் ஒத்துழைக்க
வேண்டியது எமது பாதுகாப்புக்கு இன்றியமை
யாதது.

இந்த விடயத்தில் அரசியல் பேசிக்கொண்
டும், அரசின் நடவடிக்கைகளை விமர்சித்துக்
கொண்டும் இருப்பது தமிழர்களுக்கே தீங்கா
கப் போய் முடிந்துவிடக்கூடும்.

இது ஆயுதப் போர்க் கால ஊரடங்குச் சட்ட
மல்ல, நாம் அனைவரும் நம்மை நாமே பாது
காத்துக் கொள்வதற்கான ஊரடங்குச் சட்டம்
என்பதை நன்குணர்ந்துகொண்டு வீடுகளுக்
குள்ளேயே எம்மைத் தனிமைப்படுத்தி நோய்ப்
பரவலை தடுக்க ஒத்துழைக்கவேண்டும்.

இது விதண்டாவாதம் செய்வதற்கும் வீண்
அரசியல் செய்வதற்குமான நேரமல்ல, மக்
களை விழிப்புணர்வூட்டிப் பாதுகாப்பதற்கும்
அனைத்துச் சுகாதார மற்றும் தடுப்பு நடவடிக்
கைகளுக்கும் ஒத்துழைப்பதற்குமான நேரம்.

நமது சமய, சமூக, அரசியல் தலைமை
கள் அரசியல் வேறுபடுகள், முரண்பாடுகள்,
காழ்ப்புணர்வுகளுக்கு அப்பால் நின்று இந்த
விடயத்தை அணுகி, அதன் அவசரத்தையும்,
ஆழத்தையும் புரிந்து கொண்டு, அரச இயந்
திரத்துடன் சேர்ந்து கட்டொழுங்கில் செயற்பட
மக்களை வழிகாட்டித் தயார் செய்ய வேண்
டும்.

நமது பார்வை
உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online



# ஊரடங்கு மத்தியில் ஒன்று கூடல்களா?

## விசாரணைகள் ஆரம்பம் எனத் தகவல்

கொரோனோ அவிவிசத்தின் மத்தியில் யாழ்.குடா
நாடு அல்லாடிவரும் நிலையில் அது பற்றி கிஞ்சி
தேனும் அக்கறையின்றி செயற்படும் தரப்புக்கள்
பற்றி விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன எனத்
தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் காரைநகரிலுள்ள முத்துமாரி
ஆலயத்தில் திருவிழா நிகழ்வு நடாத்த காவல்துறை
அனுமதித்துள்ளது.

அதேபோன்று நேற்றும் முந்தினமும் இணுவில்
உள்ளிட்ட சில இடங்களில் கோலாகலமாக திருமண
விழாக்கள் நடத்தப்பட்டுள்ளமை பற்றி அறிவிக்கப்
பட்டுள்ளது.

இவை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்
பட்டுள்ளமையுடன் ஊரடங்கை மீறியமை தொடர்பில்
கைதுகள் முன்னெடுக்கப்படலாமென எதிர்பார்க்கப்
படுகின்றது.

குறிப்பாக காவல்துறையைவிவி சேர்ந்த சிலா்
என்று கூடல்களுக்கு உத்தியோகபூர்வமற்ற வகை
யில் அனுமதித்துள்ளமை பற்றியும் விசாரணை
கள் இடம்பெறுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

# ஊரடங்கு நீக்கப்பட்டதும் வரிசையில் நிற்காதீர்கள்!

## எரிபொருளுக்குத் தட்டுப்பாடு ஏற்படாது

ஊரடங்கு சட்டம் நீக்கப்பட்டதை தொடர்ந்து
எரிபொருள் எவ்வித தட்டுப்பாடுமின்றி

விநியோகிப்பதற்கு தேவையான அளவு
களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே ஊடரங்கு
சட்டம் நீக்கப்பட்டதும் தேவையற்ற விதத்தில் மக்
கள் எரிபொருள் நிலையங்களில் வரிசையில்
காத்திருப்பது அவசியமற்றாகும் என கனிய பெற்
றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித்
விஜயசிங்க தெரிவித்தார்.

அவசர மற்றும் நாளாந்த தேவைக்கு போது
மான அளவு எரிபொருள்கள் கூட்டுத்தாபனத்தில்
களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன. ஊரடங்கு சட்டம்
நீக்கப்பட்டதை தொடர்ந்து மக்கள் எரிபொருள்
நிலையங்களில் பதற்றமடைந்து வரிசையில்
காத்திருப்பது தேவையற்றதாகும்.

ஊரடங்கு சட்டம் நீக்கப்பட்டதை தொடர்ந்து
மக்கள் எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கு
நாடு தழுவிய ரீதியில் உள்ள 480 எரிபொருள்
நிரப்பு நிலையங்களில் தேவையான அளவு
எரிபொருளை

பெற்றுக்கொள்ள முடியும். அதற்கான வசதி
களும் கூட்டுத்தாபனத்தின் ஊடாக

முன்னெடுக்கப்பட்டுள்ளன. எரிபொருள்
போக்குவரத்து மற்றும் விநியோகம் தொடர்பி
லான தகவல்களை கனிய எண்ணெய் கூட்டுத்தா
பனத்தின் உத்தியோகப்பூர்வ வலைத்தளங்க
ளில் பெற்றுக்கொள்ள முடியும். – என்றும் அவர்
தெரிவித்தார்.

## நாளை 24.03.2020 செவ்வாய்க்கிழமை

நட்சத்திரம்: பூரட்டாதி பி.இ 1.57 வரை
திதி : சதுர்த்தசி பி.ப 1.27 வரை
இராகுகாலம் : 7.46 – 9.16
சுப நேரம் : 12.16 – 1.46

# கிடுகிடுவென எகிறும் சாவுகள்

லண்டன், மார்ச் 23

உலகைத் தன் பிடிக்குள் இறுக்கி வைத்துள்ள கொரோனா வைரஸ் பாதிப்புக்குள்ளாவோர் மற்றும் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை கடந்த சில நாள்களாகத் தொடர்ந்து கிடுகிடுவென உயர்ந்து வருகின்றது.

கடந்த ஐந்து நாள்களில் மட்டும் 4 ஆயிரத்து 700 பேர் உயிரிழந்திருக்கின்றனர்; கிட்டத்தட்ட ஒரு லட்சம் பேர் நோய்த் தொற்றுக்குள்ளாகி இருக்கின்றனர்.



188 நாடுகள் இந்த வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளன. 96 ஆயிரம் பேர் நோய்த் தாக்கத்தில் இருந்து மீண்டுள்ளனர். எனினும் 10 ஆயிரத்துக்கும் அதிகமானவர்களின் நிலை மோசமாக இருப்பதால் அடுத்து வரும் நாள்களிலும் உயிரிழப்பு எண்ணிக்கை இன்னும் இன்னும் அதிகரிக்கவே வாய்ப்புக்கள் இருப்பதாக மருத்துவ உலகம் நம்புகின்றது.

கொரோனாவை எதிர்கொள்ளத் தற்காலிக மருத்துவமனையை ஸ்பெயின் அதன் தலைநகர் மாட்ரிட்டில் ஏற்படுத்துகிறது. இந்த மருத்துவமனையில் 5,500 படுக்கை வசதிகள் இருக்கும்.

கொரோனாவை எதிர்கொள்ள அமெரிக்கா அளிப்பதாகக் கூறிய உதவிகளை ஈரான் மறுத்துள்ளது. ஈரானின் அதி உயர் தலைவர் ஆயத்துல்லா அலிகொமேனி தனது தொலைக்காட்சி உரையில், அமெரிக்காவைத் தனது தீய எதிரி எனக் குறிப்பிட்டார்.

மேலும் அவர், நீங்கள்தான் இந்த வைரஸை உருவாக்கியவர்கள் என குற்றஞ்சாட்டப்படுகிறது. அது உண்மையா எனத் தெரியாது. ஆனால், ஈரானுக்கு நீங்கள் உதவ விரும்புவது எங்களுக்கு விநோதமாக இருக்கிறது, சந்தேகத்தையும் எழுப்புகிறது, எனக் கூறி உள்ளார்.

ஈரானியர்களின் மரபணு தகவல்களை பல்வேறு விதங்களில் திரட்டி ஈரானியர்களை குறிவைத்தே இந்த வைரஸ் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

இத்தாலியில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மிக வேகமாக 5 ஆயிரத்தை எட்டிவருகின்றது. நேற்றிரவு வரையில் அங்கு 4 ஆயிரத்து 825 பேர் உயிரிழந்திருந்தனர். இத்தாலியைத் தொடர்ந்து ஸ்பெயினின் உயிரிழப்புக்களும் அதிகரித்து வருகின்றன. அங்கு இறந்தோர் எண்ணிக்கை 2 ஆயிரத்தை நெருங்கி வருகின்றது. ஒரே நாளில் அங்கு 372 பேர் உயிரிழந்திருக்கின்றனர். 3 ஆயிரம் பேருக்குப் நோய் புதிதாகத் தொற்றியிருக்கின்றது.

ஈரானின் சாவு எண்ணிக்கையும் ஆயிரத்து 685ஆக அதிகரித்துள்ளது. பிரான்ஸில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 562ஐ எட்டியுள்ளது. ஜேர்மனியில் இந்த எண்ணிக்கை 100ஐ நெருங்கியுள்ளது.



## சீனா மீது அதிபர் ட்ரம்ப் மீண்டும் குற்றச்சாட்டு

கொரோனா வைரஸ் பற்றிய தகவல்களை பகிர்ந்து கொள்வதில் சீனாவிடம் வெளிப் படைத் தன்மையோடு நடந்துகொள்ளாமல் போனதால் அதற்கான விலையை இப்போது உலகம் கொடுத்துக்கொண்டிருக்கிறது என்று மீண்டும் சாடினார் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப்.

அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் வெள்ளிக்கிழமை வோஷிங்ரன் வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களுடன் பேசினார்.. அப்போது அவர் மீண்டும் சீனா மீது குற்றம்சாட்டும் வகையில் கருத்து வெளியிட்டார்.

கொரோனா வைரஸ் சீனாவில் இருந்துதான் வந்தது. அது கட்டுப்பாடு இல்லாமல் போய்விட்டது. இதில் சிலர் வருத்தப்படுகிறார்கள். அதை நான் அறிந்திருக்கிறேன்.

நான் ஜின்பிங்கை அறிந்திருக்கிறேன். அவர் சீனாவை நேசிக்கிறார். அவர் அமெரிக்கா மீது மதிப்பு வைத்திருக்கிறார். நானும் சீனா மீது மிகுந்த மதிப்பு வைத்துள்ளேன். நான் அதிபர் ஜின்பிங் மீதும் மதிப்பு வைத்துள்ளேன்.

அவர் எனது நண்பர். சீனாவுடன் எனக்கு நல்லுறவு உள்ளது.

இதுபோன்ற கருத்தை ட்ரம்ப் இதற்கு முன்னரும் கூறியிருக்கிறார். கொரோனா வைரஸை அவர் சீன வைரஸ் என்றே அழைத்தார்.

சீனா இதற்குக் கடும் கண்டனம் தெரிவித்தது. அமெரிக்க இராணுவமே சீனாவில் இந்த வைரஸைப் பரப்பியது என்று பதிலுக்குக் குற்றஞ்சாட்டியது.

இந்த நிலையில் ட்ரம்ப் மீண்டும் அதே குற்றச்சாட்டை எழுப்பியுள்ளார்.

## அரச படைகளின் தாக்குதலில் நைஜீரியாவில் 26 பேர் மரணம்

நைஜீரியாவில் அரச படையினர் நடத்திய தேடுதல் தாக்குதலில் கிளர்ச்சிப் படைகளைச் சேர்ந்த 26 பேர் கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்பிரிக்க நாடான நைஜீரியாவில் போகோஹராம், இஸ்லாமிய அரசு (ஐ.எஸ்), கிளர்ச்சியாளர்கள் உள்ளிட்ட பல்வேறு பயங்கரவாத அமைப்புகள் செயல்பட்டு வருகின்றன.

இந்த பயங்கரவாத குழுக்கள் பாதுகாப்பு படையினரையும், பொதுமக்களையும் குறிவைத்து அவ்வப்போது தாக்குதல்களை நடத்தி வருகின்றன. இந்த தாக்குதல்களுக்கு பாதுகாப்பு படையினரும் பதில் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், அந்த நாட்டின் கட்சினா மற்றும் சம்பரா மாகாணங்களில் இராணுவத்தினர் தேடுதல் வேட்டை நடத்தினர். இந்த தேடுதல் வேட்டையில் கிளர்ச்சியாளர்கள் 26 பேர் கொல்லப்பட்டனர் என்று நைஜீரிய இராணுவத்தின் செய்தித்தொடர்பாளர் தெரிவித்தார்.

## வெள்ளை மாளிகையின் அதிகாரிக்கும் கொரோனா

வோஷிங்ரன், மார்ச் 23

அமெரிக்க அதிபர் மாளிகையான வெள்ளை மாளிகையில் பணியாற்றிவந்த அதிகாரிக்கு கொரோனா வைரஸ் பரவியிருப்பது நேற்று கண்டுபிடிக்கப்பட்டது.

கொரோனா வைரஸ் உறுதி செய்யப்பட்ட நபர் அமெரிக்க துணை அதிபர் மைக் பென்சின் அலுவலகத்தில் வேலை செய்துவந்துள்ளார்.

இதையடுத்து, அமெரிக்க துணை அதிபர் மைக் பென்சுக்கு கொரோனா பரவியிருக்கலாம் என சந்தேகம் எழுந்தது. இதனால் துணை அதிபருக்கும் அவரது மனைவி ஹரென் பென்சுக்கும் இன்று வைரஸ் பரிசோதனை செய்யப்பட்டது.

இந்த பரிசோதனையின் முடிவில் துணை அதிபர் மைக் பென்ஸ் மற்றும் அவரது மனைவி ஹரென் பென்ஸ் ஆகிய இருவருக்கும் கொரோனா வைரஸ் பரவவில்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக துணை அதிபரின் செய்தித் தொடர்பு அலுவலகம் அதிகாரப்பூர்வமாக தெரிவித்துள்ளது.

இதற்கிடையே, அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்பும் கடந்த வாரம் கொரோனா பரிசோதனை செய்துகொண்டார். பரிசோதனையின் முடிவில் டிரம்புக்கு கொரோனா வைரஸ் பரவவில்லை என்ற தகவல் வெளியானது.

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் அமெ.வில் மரணம்

### கொரோனாவின் கோரத் தாண்டவத்தால்

வோஷிங்ரன், மார்ச் 23

கொரோனா வைரஸ் பாதிப்பின் காரணமாக அமெரிக்காவில் ஒரே குடும்பத்தை சேர்ந்த நான்கு பேர் உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

அந்தக் குடும்பத்தினரின் மேலும் மூன்று உறவினர்களும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அமெரிக்காவின் நியூஜெர்சி மாகாணத்தைச் சேர்ந்த 73 வயதான கிரேஸ் பியூஸ்கோ என்ற மூதாட்டி மற்றும் அவரது ஆறு பிள்ளைகளும் மிகப் பெரிய குடும்ப உறுப்பினர்கள் ஒன்றுக்கூடல் நிகழ்வுக்கு சென்று வந்த பிறகு அவர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டது தெரியவந்துள்ளது.

இதையடுத்து உடல் நிலை பாதிக்கப்பட்ட அந்த மூதாட்டியும் குடும்ப உறுப்பினர்கள் மூவரும் உயிரிழந்துள்ளனர். கிரேஸ் பியூஸ்கோவுக்கு 11 பிள்ளைகள்.



உயிரிழந்த குடும்பத்தினரின் உறவினர்கள் 20 பேர் தங்களைத் தனிமைப்படுத்தி கொண்டுள்ளனர். அவர்களுக்கும் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளதா என்று பரிசோதிக்கப்பட்டு வருகிறது.

உலகிலேயே கொரோனா வைரஸால் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் பட்டியலில் 27 ஆயிரம் பேருடன் அமெரிக்கா மூன்றாவது இடத்தில் உள்ளது, அவர்களில் இதுவரை 350 பேர் உயிரிழந்துள்ளனர்.

# நடிகர் விசு நேற்று காலமானார்



தமிழ் திரைப்பட நடிகர், இயக்குநர் விசு உடல்நலக் குறைவால் காலமானார். விசு ஒரு தமிழ்த் திரைப்பட இயக்குனர், தயாரிப்பாளர், கதாசிரியர், வசனகர்த்தா மற்றும் நடிகர் என்று பல அவதாரங்கள் எடுத்தவர்.

1941ஆம் ஆண்டு பிறந்த இவர் திரைப்படம் தவிர்த்து மேடை நாடகம், தொலைக்காட்சித் தொடர் பலவற்றிலும் நடித்துள்ளார். நடிகர் கிஷ்மு இவரது சகோதரர் ஆவார். இவர் இயக்கிய சம்சாரம் அது மின்சாரம் திரைப்படம் பெரும்பாலான இந்திய மொழிகளில் மீண்டும் எடுக்கப் பட்டுள்ளது.

# 31ஆம் திகதி வரையும் ரயில் சேவைக்கு தடை

இந்தியாவில் கொரோனா பரவல் தடுப்பு நடவடிக்கையின் அடுத்த கட்டாக நாடு முழுவதும் பயணிகள் ரயில், மெட்ரோ ரயில் என்பனவற்றின் சேவைகள் மார்ச் 31ஆம் திகதி வரை நிறுத்தப்பட்டுள்ளன. மத்திய அரசு இந்தத் தகவலைத் தெரிவித்தது.

உலகம் முழுவதும் பாதிப்பை ஏற்படுத்தி வரும் கொரோனா வைரஸ் இந்தியாவிலும் வேகமாக பரவி வருகிறது. இந்தியாவில் இதுவரை 341 பேருக்கு கொரோனா பரவியுள்ளது. வைரஸ் தாக்குதலுக்கு இதுவரை 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதற்கிடையில் நாடு முழுவதும் நேற்று உள்முடக்கம் உத்தரவு பின்பற்றப்பட்டு வருகிறது. இந்த ஊரடங்கை ஒட்டி நாடு முழுவதும் உள்ள பெரும்பாலான ரயில் சேவைகள் நிறுத்தப்பட்டிருந்தது



# ஒருநாள் உள் முடக்கம் இந்தியாவில் வெற்றி!

## விண்ணதிர மக்கள் கரகோசமும் எழுப்பினர்



புதுடில்லி, மார்ச் 23

கொரோனா வைரஸ் பாதிப்பைக் கட்டுப்படுத்தும் முன்னோடி நடவடிக்கையாக நேற்று ஞாயிற்றுக்கிழமை ஒருநாள் உள்முடக்கம் ஒன்றுக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி விடுத்த அழைப்புக்கு அமோக ஆதரவு கிடைத்துள்ளது. மக்கள் வீடுகளுக்குள்ளேயே இருந்து போராட்டத்தை வெற்றிபெறச் செய்ததுடன், மருத்துவ சேவை உள்ளிட்ட அத்தியாவசிய சேவையில் ஈடுபடுபவர்களுக்குப் பாராட்டுத் தெரிவிக்கும் முகமாக வீடுகளில் எழுந்து நின்று கைதட்டிப் பாராட்டுத் தெரிவித்தனர்.

பிரதமரின் அறிவிப்பிற்கு மாநில அரசுகள், சமூக அமைப்புகள், சினிமா நடிகர்கள் உட்பட பல தரப்பினரும் ஆதரவு தெரிவித்திருந்தனர். ஊரடங்கைத் தீவிரமாகக் கடைபிடிப்பதற்கான நடவடிக்கைகளை மாநில அரசுகள் எடுத்தன.. பல மாநிலங்களில் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. மெட்ரோ ரயில்களும், பயணியர் ரயில்களும் நிறுத்தப்பட்டன.

மக்கள் தானாகவே முன்வந்து வீட்டுக்குள்ளேயே முடங்கினர். டில்லி, மும்பை, சென்னை, கோல்கட்டா, ஐதராபாத், உள்ளிட்ட பெருநகரங்கள் வெறிச்சோடின. இந்தியா முழுவதும் பெரும் அளவில் ஆதரவு கிடைத்தது.

இதனை தொடர்ந்து நேற்றுக் காலை 7 மணிக்கு ஆரம்பமாகிய மக்கள் ஊரடங்கு, நாடு முழுவதும் அமைதியாக கடைபிடிக்கப்பட்டது. அசம்பாவிதங்கள் குறித்து அறிக்கைகள் ஏதுமில்லை என்று தெரிவிக்கப்பட்டது. கடைகள் முழுவதும் அடைக்கப்பட்டன. பொதுப் போக்குவரத்து ஏதும் இயங்காததால், சாலைகள் வெறிச்சோடி காணப்பட்டன. மக்கள் அனைவரும் வீடுகளிலேயே தங்கிருந்தனர்.

உத்தர பிரதேச மாநிலம் முழுவதும் மக்கள் ஊரடங்கு அமைதியாக நடந்தது.. மக்கள் நடமாட்டம் இன்றி சாலைகள் வெறிச்சோடி காணப்பட்டது. கடைகள் முழுவதும் அடைக்கப்பட்டன.

மாலை 5 மணி அளவில் அவரவர் வீடுகளின் முன்பாக நின்றி கைகளைத் தட்டி பாராட்டு ஓசை எழுப்பினர். கொரோனாவோடு போராடி சேவை செய்யும் மருத்துவர்களுக்கு கை தட்டி மக்கள் நன்றி தெரிவிக்க வேண்டும் என்று பிரதமர் மோடி நாட்டு மக்களிடம் கேட்டிருந்தார். இதனையேற்று. பலரும் வீதிகளிலும், மொட்டை மாடிகளிலும் நின்று படி கை தட்டினர், மணி ஒலித்தனர். இந்தக் காட்சி உணர்ச்சிப்பூர்வமாக அமைந்தது.

# இந்தியாவில் உயிரிழப்பு ஏழாக நேற்று உயர்ந்தது

இந்தியால் கொரோனா வைரஸ் வேகமாக பரவி வருகிறது. நாட்டில் நேற்றிரவு வரை 341 பேருக்கு வைரஸ் பரவியுள்ளதாக இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் அதிகாரப்பூர்வமாக தெரிவித்துள்ளது.

கொரோனா தாக்கத்தால் பீகாரில் ஒருவர் இந்தியாவில் உயிரிழந்தார். இவருடன் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஏழாக அதிகரித்துள்ளது.

கத்தார் நாட்டில் இருந்து பீகார் திரும்பிய 38 வயது நிரம்பிய நபர் கொரோனா வைரஸ் பாதிப்பு காரணமாக பாட்னாவில் உள்ள எய்ம்ஸ் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்தார்.

சிகிச்சைபலனின்றிநேற்று அவர் உயிரிழந்தார். குஜராத்தில் முதியவர் ஒருவர் உயிரிழந்தார். நேற்றுவரை 5 பேர் உயிரிழந்திருந்தனர்.

# சென்னை உட்பட 75 மாவட்டங்களை முடக்குமாறு மத்திய அரசு ஆலோசனை

சென்னை, மார்ச் 23

கொரோனாவுக்கு எதிராக நேற்று ஒரு நாள் உள் முடக்கம் அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் சென்னை உள்ளிட்ட 75 மாவட்டங்களில் இந்த உள்முடக்கம் நீடிக்கப்பட வேண்டும் என்று இந்திய மத்திய அரசு மாநில அரசுக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

நாடு முழுவதும் சுய ஊரடங்கை கடைபிடிக்க வேண்டும் என்று பிரதமர் மோடி நாட்டு மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். அதன்படி நேற்று நாடுமுழுவதும் மக்கள் வெளியே வராமல் வீட்டுக்குள்ளே முடங்கினர்.

ஆனால் கொரோனா வைரஸ் காரணமாக நற்றும் பீகார் மற்றும் மகாராஷ்டிரா மாநிலத்தில் தலா ஒருவர் பலியாகினர். அத்துடன் கொரோனா வைரஸ் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 370 ஐ தாண்டியுள்ளது.

இதனால் கொரோனாவால் பாதித்த நாட்டில் உள்ள 75 மாவட்டங்களில் ஊரடங்கு உத்தரவை நீட்டிக்க வேண்டும் என மாநில அரசுகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது. ஊரடங்கு உத்தரவை தேவைப்பட்டால் நீட்டித்துக்கொள்ளலாம் என்றும் தெரிவித்துள்ளது. இந்த மாவட்டங்களில் அத்தியாவசிய பொருட்களுக்கு மட்டுமே அனுமதி அளிக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளது.

ஏற்கனவே வருகிற 31ம் திகதி வரை நாடுமுழுவதும் பயணிகள் ரெயில், மெட்ரோ ரெயில், புறநகர் ரெயில் சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# நக்சல்களின் தாக்குதலில் 16 படையினர் காயம்

சத்தீஸ்கர் மாநிலத்தில் எல்மகுண்டா என்ற இடத்தில் நக்சல் கிளர்ச்சியாளர்களுக்கும் அரச படைகளுக்கும் இடையே நடந்த துப்பாக்கிச் சண்டையில் 16 படையினர் காயமடைந்தனர்.

எல்மகுண்டாவில் நக்சல்கள் ஒன்றுகூடுவதாகக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து அங்கு தேடுதல் நடத்தச் சென்ற அரச படையினருக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் சண்டை மூண்டது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

சின்டாகுபா, புர்காபால், டிமெல்வாடா பகுதியைச் சேர்ந்த டிஆர்ஜி, சிறப்பு அதிரடிப் படையினர். மற்றும் கோப்ரா படைப் பிரிவினரைச் சேர்ந்த அரச படையினர் இந்தத் தேடுதல் வேட்டையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

தேடுதல் வேட்டையை முடித்துக்கொண்டு வெறுங்கையுடன் படையினர் திரும்பிக்கொண்டிருந்த வழியில் கொராஜ்குடா பகுதியில் எதிர்பாராத விதமாக ஏராளமான நக்சலைட்டுகள் ஒன்றுகூடி தாக்குதல் நடத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது. பாதுகாப்புப் படையினரும் பதில் தாக்குதல் நடத்தினர். எனினும் 16 படையினர் காயம் அடைந்தனர். கிளர்ச்சியாளர்களுக்கு ஏற்பட்ட சேதங்கள் குறித்து அதிகாரிகள் தகவல் எதுவும் தெரிவிக்கவில்லை.

250 க்கும் அதிகமான நக்சலைட்டுகள் மறைந்து இருந்து தாக்குதல் நடத்தியதாக தகவல்கள் கிடைத்ததன் மூலம் மேலும் 500 பாதுகாப்புப்படை வீரர்கள் அனுப்பி வைக்கப்பட்டு நிலமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதாக பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

# கொரோனா கட்டுப்பாட்டுக்கு 2,500 கோடி ரூபா ஒதுக்கீடு

கொரோனா பரவாமல் தடுக்க மாநில அரசுகளுக்கு ரூ.2,570 கோடி நிதி ஒதுக்கப்பட்டதாக மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

உலகின் பல நாடுகளை அச்சுறுத்தி வரும் கொரோனாவின் தாக்கம் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. கொரோனாவிற்கான தடுப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் மத்திய மற்றும் மாநில அரசுகளும் தீவிரமாக செயல்பட்டு வருகின்றன. இந்தியாவில் இதுவரை 5 பேர் வரை பலியானதாக கூறப்படுகிறது. இந்நிலையில் கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக மாநிலங்களுக்கான நிதியை ஒதுக்கீடு



செய்துள்ளதாக மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்தாவது:-

கொரோனா வைரஸின் எதிரொலியாக நகர்ப்புற மற்றும் கிராமப்புற மக்களின் அடிப்படை சேவைகளை வழங்குவதில் உள்ளாட்சி அமைப்புகள் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும். அதில் நகர பகுதிகளுக்கு ரூ.1,629 கோடியும், ஊரகப் பகுதிகளுக்கு ரூ.940 கோடி நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது. மாநிலங்களின் வாரியாக, தமிழகத்திற்கு ரூ.987.85 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

# கொரோனா: ராஜபக்ஷக்களுக்கு விழுந்த லொத்தர்?

- நிலாந்தன் -



தேர்தல் ஆணையாளர் தேர்தல் திகதியை பிற்போட்டிருக்கிறார். இயற்கை அனர்த்தச் சூழல், அசாதாரண நிலைமை, அவசர கால நிலைமை போன்றவற்றைக் காட்டித் தேர்தல் திகதியை மேலும் பிற்போடலாம். ஆனால் அரசாங்கம் அந்தத் திகதியை அதிக காலம் பிற்போட விரும்பாது. கொரோனா வைரஸை எவ்வளவு கெதியாகக் கட்டுப்படுத்த முடியுமோ அவ்வளவு கெதியாகக் கட்டுப்படுத்தவே அரசாங்கம் முயலும். எனவே கொரோனாவை எவ்வளவு கெதியாகக் கட்டுப்படுத்தலாம் என்பதுதான் தேர்தலை எப்பொழுது நடத்தலாம் என்பதைத் தீர்மானிக்கும்.

ராஜபக்ஷக்கள் றாணுவக் கரம் கொண்டு கொரோனாவை கட்டுப்படுத்துவார்கள். ஏற்கனவே யுத்தத்தை வெற்றி கொண்டது போல அவர்கள் கொரோனா வைரஸை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளையும் ஏறக்குறைய ஒரு யுத்த நடவடிக்கை போல முன்னெடுக்கத் தேவையான முன் அனுபவமும் இராணுவப் பண்பும் அவர்களிடம் உண்டு.

”எதேச்சாதிகார அரசுகளுக்கு கொரோனா



வைரஸ் ஒரு சுவர்க்கம்'' என்று மொஸ்கோவில் உள்ள ஒரு மேற்கத்தைய ராஜதந்திரி கூறியிருக்கிறார்.

முன்பு ரஷ்யாவின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ஒன்றாகிய உக்ரேனின் அதிபர் செலென்ஸ்கி பின்வருமாறு கூறியிருக்கிறார்: – ”ஏனைய நாடுகளின் அனுபவம் எதைக் காட்டுகிறது என்றால் மென்மையும் சுதந்திரமும் கொரோனா வைரஸின் நண்பர்கள் என்பதைத்தான். எனவே உக்ரேனியர்களின் உயிருக்கும் ஆரோக்கியத்துக்குமாக நாங்கள் கடுமையான – உடனடியான பெரும்பாலும் அபகீர்த்தி குரிய – நடவடிக்கைகளை எடுப்போம்.”

மேற்படி கூற்றுக்கள் ராஜபக்ஷ ஆட்சிக்கும் பொருந்தும். எப்படி அவர்கள் யுத்தத்தை வெற்றி கொண்டார்களோ அப்படியே கொரோனா வைரஸையும் வெற்றிகொள்ளப் பார்ப்பார்கள்.

”பயங்கரவாதத்தின் மூலம் நாடு முழுவதையும் நிர்மூலமாக்கத் தயாரான தமிழீழ விடுதலைப் புலிகளைக் கூண்டோடு இல்லாதொழித்த எமக்குக் கொரோனா வைரஸ் சவால் அல்ல. அது இங்கு ஆட்கொண்டால் முற்றாக இல்லாதொழிப்போம்.” – என்று கூறியுள்ளார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல.

புலிகள் இயக்கமும் கொரோனா வைரஸும் ஒன்றல்ல என்பது வேறு விடயம். ஆனால் கொரோனா வைரஸை வெற்றி கொள்வது என்பது ராஜபக்ஷகளைப் பொறுத்தவரை தேர்தல் வெற்றிகளோடு தொடர்புடையது. இந்த வைரஸை மிக விரைவாக, அதிக சேதம் இன்றி வெற்றி கொள்வார்களாக இருந்தால் அடுத்தடுத்த தேர்தல்களில் அவர்களுக்கு அதைவிடச் சிறந்த பிரச்சாரம் இருக்காது.

வைரஸ் பரவத் தொடங்கிய புதிதில் அது அரசாங்கத்துக்கு ஒரு தடையாகத்தான் காணப்பட்டது. ஏனெனில் ஜெனீவாக் கூட்டத் தொடரை முன்வைத்து ஓர் இன அலையைத் தோற்றுவித்து, அதன்மூலம் அமோக வெற்றியைப் பெற அவர்கள் திட்டமிட்டிருந்தார்கள். ஜெனீவாத் தீர்மானத்தை எதிர்ப்பது, இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவிற்கு எதிரான அமெரிக்கப் பயணத் தடையை எதிர்ப்பது போன்றவற்றின் மூலம் அவர்கள் இன அலை ஒன்றை இலகுவாகத் உற்பத்தி செய்திருக்கலாம். ஆனால் கொரோனா வைரஸின் வருகை அந்த நிகழ்ச்சி நிரலைக் குழப்பி விட்டது. எனவேதான் வைரஸ் பரவுகிறதோ இல்லையோ அதுவரை பார்த்துக் கொண்டிருக்காமல் ஜெனீவாச் சூட்டோடு தேர்தலை வைத்துவிட அவர்கள் விரும்பினார்கள். அவ்வாறு அவர்கள் விரும்பியதற்கு முக்கியமான காரணம் எதிர்க்கட்சி பலமாக இல்லை என்பது.

யு.என்.பி. இப்பொழுதும் உடைந்து போயுள்ளது. கட்சிக்குள் தலைமைத்துவப் போட்டி முடிவுக்கு வரவில்லை. எனவே ஒரு தேர்தலை எதிர்கொண்டு ராஜபக்ஷக்களுக்குப் பலமான எதிர்ப்பைக் காட்ட அக்கட்சியால் இப்பொழுது முடியாது. இது ராஜபக்ஷக்களுக்கு சாதகமான ஓர் அம்சம். கொரோனாவை முன்வைத்து தேர்தலை ஒத்திவைத்தால் நிலைமைகள் ஒப்பீட்டளவில் மாறக்கூடும். புதிய நிலைமைகளுக்கு ஏற்ப யு.என்.பி. தன்னைப் பலப்படுத்திக் கொள்ளுமாக இருந்தால் அது ராஜபக்களுக்குச் சவாலாக அமையலாம். எனவே ஜனாதிபதி தேர்தலில் பெற்ற வெற்றியின் அலை தொடர்ந்து வீசும் ஒரு காலகட்டத்தில் தேர்தலை வைப்பதே நல்லது. அதனால்தான் அரசாங்கம் தேர்தலை ஒத்திவைக்க விரும்பவில்லை. எனவே யு.என்.பி. தன்னைப் பலப்படுத்திக் கொள்வதற்கு இடையில் தேர்தலை வைப்பதற்கே அரசாங்கம் விரும்பியது. ஆனால் சுயாதீன தேர்தல் ஆணைக்குழு தேர்தல் திகதியைப் பின்தள்ளி விட்டது.

இனி அரசாங்கம் ஒரு யுத்தத்தை தொடங்க வேண்டும். அந்த யுத்தத்தில் அவர்கள் வென்று காட்ட வேண்டும். அந்த வெற்றி ஒன்றே அவர்களுக்கு போதும். தேர்தலில் கொத்தாக வாக்குகளை அள்ளலாம். எனவே இப்பொழுது உடனடியாக கொரோனாவுக்கு எதிரான யுத்தத்தை அவர்கள் தொடங்க வேண்டும். அதேநேரம் இப்போதுள்ள அசாதாரண சூழலை சாட்டாக வைத்து சாதாரண சிங்கள வாக்காளர்களைக் கவரும் விதத்தில் சலுகைகளையும் அறிவிக்கலாம். அப்படிப்பட்ட சலுகைகள் சிலவற்றை ஏற்கனவே அரசாங்கம் அறிவித்து விட்டது. பருப்புக்கும் மீன் ரின்னுக்கும் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன. இவை சாதாரண ஜனங்களின் சாப்பாடுகள். இந்தச் சலுகையானது சாதாரண சிங்கள மக்கள் மத்தியில் அதிகம் எடுபடும். இவ்வாறான சலுகைகளை அறிவித்து விட்டு ராஜபக்ஷக்கள் கொரோனா வைரஸை எதிர்கொள்வார்கள்.

சிவில்தன்மைமிக்க ஓர் அரசு அரசாங்கம் இதுபோன்ற நெருக்கடிகளை கையாள்வதற்கும் ஓர் இராணுவ தனம் மிக்க அரசாங்கம் கையாள்வதற்கும் இடையில் வேறுபாடுகள் உண்டு. இராணுவப் பண்பு அதிகம் உடைய ஓர் அரசாங்கம் – அதிலும் குறிப்பாகப் படைத்தரப்புடன் மிக நெருக்கமான உறவை கொண்டிருக்கும் – ஓர் அரசாங்கம் இது போன்ற நிலைமைகளை விரைந்து கையாள முடியும்.

”நாய் பிடிப்பது போல நோய்த் தொற்றுள்ளவர்களைத் துரத்திப் பிடிக்க ஓர் அரசாங்கம் துணிந்தால் இலகுவாகக் கொரோனாவைக் கட்டுப்படுத்தலாம்” என்று ஒரு புலம் பெயர்ந்து வாழும் தமிழர் சொன்னார். இக்கட்டுரையின் தொடக்கத்தில் கூறப்பட்ட மேற்கத்தைய ராஜதந்திரியும் உக்ரேனின் ஜனாதிபதியும் சொல்ல வந்ததும் அதைத் தான்.

இராணுவப் பண்பு அதிகம் உடைய ஓர் அரசாங்கம் பெரும் தொற்று நோய்களையும் இயற்கைப் பேரழிவுகளையும் துணிச்சலாக எதிர்கொள்ளும். கிட்டத்தட்ட ஒரு யுத்தத்தை எதிர்கொள்வது போல அவர்கள் அந்த அசாதாரண சூழலை எதிர்கொள்வார்கள். சீனா அப்படித்தான் எதிர்கொண்டது. ஒருபுறம் சீனா துணிச்சலான முடிவுகளை எடுத்தது. இன்னொருபுறம் வரையறையின்றிக் காசை கொட்டியது. இதன் மூலம் நோய் பரவும் வேகத்தை அது கட்டுப்படுத்தியது.

“இராணுவப் பண்பு அதிகம் உடைய ஓர் அரசாங்கம் பெரும் தொற்று நோய்களையும் இயற்கைப் பேரழிவுகளையும் துணிச்சலாக எதிர்கொள்ளும். கிட்டத்தட்ட ஒரு யுத்தத்தை எதிர்கொள்வது போல அவர்கள் அந்த அசாதாரண சூழலை எதிர்கொள்வார்கள். சீனா அப்படித்தான் எதிர்கொண்டது.”

சிங்கப்பூரும் அப்படிதான் நிலைமைகளைக் கட்டுப்பாடுக்குள் கொண்டு வந்தது.

2003 இலிருந்து சார்ஸ் என்று அழைக்கப்படும் வைரஸ் சிங்கப்பூர் குடிமக்களை தாக்கியது. அதில் கிட்டத்தட்ட 33 பேர் கொல்லப்பட்டார்கள். சார்ஸ் வைரஸின் அடுத்த கட்டக் கூர்ப்பே கொரோனா என்று கூறப்படுகிறது. சார்ஸ் வைரஸை வெற்றி கொண்ட அனுபவத்தின் அடிப்படையில் சிங்கப்பூர் கொரோனா வைரஸையும் ஒப்பீட்டளவில் விரைவாகக் கட்டுப்படுத்தியிருக்கிறது.

கிட்டத்தட்ட வடகொரியாவும் அப்படித்தான் நிலைமைகளை கையாண்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

மாறாக, தென் கொரியா அவ்வாறு கையாளத் தவறியதன் விளைவாக அங்கே நோய்த்தொற்று அதிகமாகியது என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இப்பொழுது ராஜபக்ஷக்களும் அதைத்தான் செய்யப் போகிறார்கள். இலங்கை ஒரு தீவாக இருப்பது அவர்களுக்கு அனுகூலமானது. கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்குப் பொறுப்பாக இராணுவத் தளபதி நியமிக்கப்பட்டிருக்கிறார். இதன் மூலம் கொரானாவுக்கு எதிரான நடவடிக்கைகளை அதிகம் இராணுவத் தன்மை மிக்கதாக அவர்கள் வடிவமைக்கக் கூடும். ஏற்கனவே நோய்த் தொற்று உடையவர்கள் என்று சந்தேகிக்கப்படும் நபர்களுக்கான தனிமைப்படுத்தல் முகாம்களை – குறிப்பாகத் தமிழ் பகுதிகளில் – பெருமளவுக்குப் படைத்தரப்பே கையாண்டு வருகிறது. கிட்டத்தட்ட 22 தனிமைப்படுத்தல் முகாம்கள் நாடு முழுவதும் உருவாக்கப்பட்டிருக்கின்றன எனக் கூறப்படுகிறது. இவற்றில் ஆறு முகாம்கள் தமிழ் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளன. அவையாவும் படைத்தரப்பின் கட்டுப்பாட்டுக்குள் உள்ளன. இவ்வாறான நடவடிக்கைகளின் முடிவில் ஒரு கட்டத்தில் கொரோனா வைரஸை அரசாங்கம் வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தும் போது புகழனைத்தும் படைத்தரப்புக்கே சேரும். அதோடு ராஜபக்ஷக்களுக்கும் சேரும்.

எனவே ராஜபக்ஷக்கள் வைரஸுக்கு எதிரான யுத்தத்தை ஒரு தேர்தல் பிரசாரமாக எடுத்துக் கொண்டு எதிர்கொள்வார்கள். இந்த யுத்தத்தில் அவர்கள் வெற்றி பெற்றால் அடுத்து வரும் எல்லா தேர்தல்களிலும் அந்த வெற்றியின் அலை வீசும். எனவே அவர்கள் இந்த யுத்தத்தை எப்படியும் வெல்லப் பார்ப்பார்கள். தேர்தல் பிரச்சாரத்துக்கு திறை சேரியிலிருந்து காசை எடுக்க முடியாது. அதை அவர்கள் தங்களுடைய கட்சி நிதியிலிருந்தோ, சொந்தச் சேகரிப்பில் இருந்தோதான் எடுக்க வேண்டும். ஆனால் கொரோனா வைரஸுக்கு எதிரான யுத்தத்தை அரச பணத்திலேயே நடத்தலாம். அரச வளங்களைக் கொட்டி அதைச் செய்யலாம். அக்காலகட்டத்தில் வழங்கப்படும் சலுகைகளுக்கான நிதியையும் திறை சேரியிலிருந்து எடுக்கலாம். அதாவது அரச செலவிலேயே ஒரு தேர்தல் பிரச்சாரத்தை முன்னெடுக்கலாம். அப்படிப் பார்த்தால் கொரோனா வைரஸ் ராஜபக்ஷக்களுக்கு நன்மையைக் கொண்டு வந்திருக்கிறதா?

சரியாக ஓராண்டுக்கு முன் இதே காலப்பகுதியில் ஈஸ்டர் குண்டு வெடிப்பு நிகழ்ந்த போது அதன் விளைவுகளை ராஜபக்ஷக்கள் வாக்குகளாகத் திரட்டி கொண்டார்கள். இப்பொழுது கொரோனா வைரஸ் கொண்டு வந்திருக்கும் சவால்களையும் அதன் விளைவுகளையும் ராஜபக்ஷக்கள் வாக்குகளாகத் திரட்ட போகிறார்களா? அதாவது முழு நாட்டுக்கும் தீங்காக காணப்படும் அம்சங்கள் ராஜபக்ஷ குடும்பத்திற்கு நன்மைகளாக முடிகின்றனவா?

(இந்தக் கட்டுரை நேற்றைய ‘காலைக்கதிரின்’ மாலை வெளியீட்டில் பிரசுரமானது)

காலைக்கதிர்



# யாருமின்றி அநாதையாக உயிரிழக்கும் நிலைமை

## எதிரிக்கும் வரக்கூடாது...!



எல்லோரும் எங்களை ஹீரோ என்கிறார்கள், ஆனால் எங்களுக்கு அப்படி தோன்றவில்லை", என்கிறார் பாலோ மிரண்டா.

இத்தாலி நாட்டில் உள்ள கிரெமொனா நகரில் உள்ள மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் செவிலியராக இருக்கிறார் அவர்.

இத்தாலியை பொறுத்தவரை லம்போர்டி பகுதியில் உள்ள சிறய நகரம் தான் கொரோனா தொற்றின் மையப் பகுதியாகும். அங்கு 2,167 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். 199 பேர் உயிரிழந்துள்ளனர்.

இத்தாலிதான் இன்று உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் தொற்றுக்கு அதிகமானவர்களின் உயிர்களைக் காவு கொடுத்திருக்கின்றது. அங்கு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை வெகு விரைவாக 5 ஆயிரத்தை எட்டிவருகின்றது.

மற்ற செவிலியர்களைப் போல் கடந்த ஒரு மாதமாக தொடர்ந்து 12 மணி நேரம் உழைக்கிறார் பாலோ.

நாங்கள் அனைவரும் செவிலியர் சேவையில் இருக்கிறோம். ஆனால் நாங்களும் அவ்வப்போது சோர்வாக உணர்கிறோம். இப்போதோ ஏதோ பாதாளத்தில் இருப்பது போல் உணர்கிறோம். எங்களுக்கும் அச்சமாக இருக்கிறது என்கிறார் அவர்.

புகைப்படங்கள் எடுப்பதில் அதீத ஆர்வம் கொண்ட பாலோ, இந்த இக்கட்டான நிலையில் தீவிர சிகிச்சை பிரிவில் இருக்கும் சூழலை புகைப் படங்கள் மூலம் ஆவணமாக்க முடிவெடுத்தார்.

என்ன நடக்கிறது என்பதை நான் மறக்க விரும்பவில்லை. இது நாளைய வரலாறு. வார்த்தைகளை விட புகைப்படங்களே வலுவானதாக இருக்கும் என நான் நினைக்கிறேன் எனக் கூறுகிறார் பாலோ.

இந்த புகைப்படங்களின் ஊடாக அவர் தன் சக ஊழியர்களின் பலத்தையும் பலவீனத்தையும் காட்ட விரும்புகிறார்.

ஒரு நாள் என்னுடைய சக ஊழியர் ஒருவர் மருத்துவமனையின் நடைபாதையில் குதித்து கொண்டும் கத்தி கொண்டும் வந்தார். அவருக்கு கொரோனா பரிசோதனை செய்யப்பட்டு, அதில் அவருக்கு நோய் தொற்று இல்லை என முடிவானதுதான் அதற்கு காரணம்.





பொதுவாக அவர் மிகவும் அமைதியானவர். ஆனால் மிகுந்த அச்சத்தில் இருந்த அவரால் தனக்கு கொரோனா இல்லை என்ற செய்தியை கேட்டதும் அந்த நிம்மதியை கட்டுபடுத்த முடியவில்லை. அவரும் சாதாரண மனிதர் தானே, என்றார் பாலோ.

இது பாலோவுக்கும் அவருடைய குழுவுக்கும் மிகவும் சோதனைக்குரிய காலம். ஆனாலும் குழுவில் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொண்டு ஒரு பிணைப்போடு உள்ளார்கள்.

சில நேரங்களில் எங்களில் சிலர் சோர்வடைவோம், வெறுப்புக்குள்ளாவோம், பயனில்லாதவர்கள் போல நினைப்போம். அழுவோம். ஏனென்றால் நாங்கள் கவனித்து கொள்ளும் சில நோயாளிகளிடம் எந்த முன்னேற்றமும் இருக்காது என்று பாலோ தெரிவிக்கிறார்.

ஆனால் அப்படி சோர்வாக இருக்கும் செவிலியரை, மற்ற செவிலியர்கள் பார்த்துக் கொள்வோம். அந்த நேரத்தில் நாங்கள் அவருக்கு ஆதரவாக இருப்போம். ஏதாவது நகைச்சுவை செய்து அவரை சிரிக்க வைப்போம். இல்லையென்றால் நாங்கள் எங்களை இழந்துவிடுவோம் என்கிறார் பாலோ.

இத்தாலியில் நான்கு வாரத்தில் சுமார் 5000 பேர் கொரோனாவால் உயிரிழந்துள்ளனர்.

35,000 பேருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப் பட்டுள்ளது. இந்த நேரத்தில் நாட்டில் உள்ள மருத்துவர்களும் செவிலியர்களும் கடினமான நிலையை எதிர்கொள்கின்றனர். குறிப்பாக வடக்கு பகுதியில் இருப்பவர்கள் பெரிதும் சிக்கலுக்கு ஆளாகின்றனர்.

பாலோ செவிலியர் பணியில் 9 ஆண்டுகளாக இருக்கிறார். மக்கள் உயிரிழப்பதை அவர் பார்த்துள்ளார். ஆனால் இந்த நேரத்தில் இவ்வளவு மக்கள் யாருமே உடன் இல்லாமல் இறப்பது அவருக்கு வருத்தத்தை ஏற்படுத்துகிறது.

தீவிர சிகிச்சை பிரிவில் உயிரிழக்கும்போது பொதுவாக அந்த நோயாளியை சுற்றி அவர்களது உறவினர்கள் இருப்பார்கள். அவர்களுக்கு நாங்கள் ஆதரவாக ஏதாவது பேசுவோம். இது நாங்கள் வழக்கமாக செய்வதில் ஒன்று

ஒருவர் உயிரிழக்கும் நிலையில் இருந்தால், அவரை பார்க்க உறவினர்களும் நண்பர்களும் அங்கு அனுமதிக்கப்படுவர். ஆனால் கொரோனா தொற்று பரவக் கூடாது என்பதற்காக குடும்பங்கள் மற்றும் நண்பர்கள் மருத்துமனையில் அனுமதிக்கப்படுவதில்லை. அவர்களால் மருத்துவமனைக்கு கூட வர முடியாது.

பொதுவாக அனைவரையும் விட்டு தன்னை தனிமைப்படுத்தி கொண்டவர்களுகே நாங்கள் சிகிச்சை செய்கிறோம். தனிமையில் இறப்பது என்பது மோசமான வியம். யாருக்கும் அது நடக்கக்கூடாது, என்கிறார் பாலோ.

கிரெமொனா மருத்துவமனை இப்போது கொரோனா வைரஸ் மருத்துவமனையாக மாறிவிட்டது. இப்போது மற்ற சிகிச்சைகள் அனைத்தும் நிறுத்தப்பட்டு, சுமார் 600 கொரோனா தொற்று நோயாளிகளுக்கு மட்டுமே அங்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது.

மேலும் புதிய நோயாளிகள் வந்த வண்ணம் இருப்பதால், இந்த மருத்துவமனையின் தீவிர சிகிச்சை பிரிவில் படுக்கைகளுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.



மருத்துவமனையின் எல்லா மூலைகளிலும் தற்போது நாங்கள் படுக்கைகளை போடுகிறோம். மருத்துவமனையில் கூட்டம் அந்தளவிற்கு அதிகமாகி விட்டது என்கிறார் பாலோ.

மருத்துவமனையின் நுழைவாயில் வெளியே தற்காலிகமாக கள மருத்துவமனை ஒன்றை கட்டுகிறார்கள். அதில் 60 படுக்கைகள் இருக்கும். ஆனால், அதுவும் போதாது என்பது பாலோவின் கருத்து.

நன்றி :- பி.பி.ஸி

**சில நேரங்களில் எங்களில் சிலர் சோர்வடைவோம், வெறுப்புக்குள்ளாவோம், பயனில்லாதவர்கள் போல நினைப்போம். அழுவோம். ஏனென்றால் நாங்கள் கவனித்து கொள்ளும் சில நோயாளிகளிடம் எந்த முன்னேற்றமும் இருக்காது என்று பாலோ தெரிவிக்கிறார்.**

# தலையைக் குறி வைத்து நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டிலேயே கைதி மரணம்

## அநுராதபுரம் சிறை சம்பவம் தொடர்பில் தகவல்

அநுராதபுரம் சிறைச்சாலையில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற குழப்ப நிலையின் போது கொல்லப்பட்ட இரு கைதிகளில் ஒருவர், தலையை குறிவைத்து நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடு காரணமாகவே உயிரிழந்துள்ளார் என அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் துலான் சமரவீர தெரிவித்தார்.

அநுராதபுரம் சிறைச்சாலையில் இடம்பெற்ற அமைதியின்மை, வன்முறை, தீ வைப்பு சம்பவங்கள் நேற்றுக் காலையாகும் போது முழுமையாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளன எனவும், அநுராதபுரம் பொலிஸாரால் சம்பவம் தொடர்பில் சிறப்பு விசாரணை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பணிப்பாளர் பொலிஸ் அத்தியட்சர் சட்டத்தரணி ஜாலிய சேனாரத்ன கூறினார்.

இந்த வன்முறை, அமைதியின்மையின் போது மொத்தமாக 8 கைதிகள் காயமடைந்து அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர் எனவும், அவர்களில் இருவரே உயிரிழந்துள்ளனர் எனவும் சுட்டிக்காட்டிய பொலிஸ் அத்தியட்சர் ஜாலிய, ஏனைய 6 பேரும் சிறைச்சாலை அதிகாரிகளின் பாதுகாப்பின் கீழ் அநுராதபுரம் சிறையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் கூறினார்.

சிறைச்சாலையின் பாதுகாப்பை பொலிஸார் தற்போது உறுதி செய்துள்ளனர் எனவும் அவர் கூறினார்.






# கொரோனாவுக்கு சிகிச்சை அளிக்கும் 24 வைத்தியாசாலைகளினதும் பணிப்பாளர்களுடனும் கொழும்பில் சுகாதார அமைச்சர் ஆலோசனை



கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களுக்கு சிகிச்சை அளித்துவரும் 24 வைத்தியசாலைகளின் பணிப்பாளர்களுடன் சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி கலந்துரையாடலொன்றை மேற்கொண்டுள்ளார்.

நேற்று நாரஹேன்பிட்டி குருதி பரிசோதனை பிரிவின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்த கலந்துரையாடலின் போது கொவிட் -19 வைரஸ் பரவலை தடுப்பதற்காக வைத்தியசாலைகள் எத்தகைய செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்பது தொடர்பிலே அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களுக்கு சிகிச்சை அளித்துவரும் வைத்தியர்கள் மற்றும்

வைத்தியசாலையின்ஊழியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் அதற்காக பெற்றுக் கொடுக்கப்பட வேண்டிய தீர்வுகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இதேவேளை வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களுக்கு உடனடியாக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் மற்றும் வைரஸ் தொற்றைக்கட்டுப்படுத்துவதற்கான நிர்ணயங்கள் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களுக்கான பி.சி.ஆர். சோதனைகளையும் அதே வைத்தியசாலையில் மேற்கொள்வதற்கான வசதிகளை பெற்றுக்கெடுப்பது தொடர்பிலும் சுகாதார அமைச்சு உத்தரவு வழங்கியுள்ளது.

வைத்தியர்கள் மற்றும் வைத்தியசாலை ஊழியர்களுக்கான போக்குவரத்து வசதிகள், தங்குமிட வசதிகளை பெற்றுக்கொடுப்பதற்காக முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைள் குறித்து சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்கவுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலையின் பணிப்பாளர்களுக்கு தேவையான நிதி ஒதுக்கீடு வசதிகளை பெற்றுக் கொடுக்குமாறு சுகாதார அமைச்சின் செயலாளர் பத்ராணி ஜயவர்தனவுக்கு ஆலோசனையும் வழங்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலைகளின் பணிப்பாளர்களுக்கு நன்றிதெரிவித்த சுகாதார அமைச்சர் தற்போது ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் நிலைமைகளின் போது நாம் பொறுப்புடனும் அர்ப்பணிப்புடனும் செயற்பட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது, இது எளிதான தல்ல, இவ்வாறான நிலைமையின் போது வைத்திய பணிப்பாளர்கள் எதிர்நோக்க நேரிடும் சிக்கல்கள் தொடர்பில் நாம் நன்கறிவோம், இந்த இக்கட்டான நிலைமையில் நாம் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். - என்றும் தெரிவித்தார்.

## கொரோனாத் தொற்றுநோய் குறித்த அதிவிசேட வர்த்தமானி வெளியானது

கொரோனா வைரஸ் தொற்று நோயனது 'அவசர தனிமைப்படுத்தலுக்குள்ளாக வேண்டிய தொற்று நோய்'என பிரகனடப்படுத்தப்பட்டு அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டள்ளது.

'அவசர தொற்று நோயிலிருந்து தனிமைப்படுத்தல் மற்றும் பாதுகாத்தல் தொடர்பான' அரசமைப்புப் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக வெளியிடப்பட்டுள்ள இந்த அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் 1925ஆம் ஆண்டு ஓகஸ்ட் 28 மற்றும் 1960ஆம் ஆண்டு மே ஆறாம் திகதி அவசர நிலைமைகளில் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்களினது விசேட அம்சங்கள் சிலவும் உள்வாங்கப்பட்டுள்ளன எனவும் குறிப்பிடப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைவாக கொரோனா வைரஸ் தொற்று நோயிலிருந்து நபர்களை பாதுகாப்பதற்காக அவசர தனிமைப்படுத்தலுக்குள்ளாக்க வேண்டிய தொற்றுநோயாக பிரகடனப்படுத்துவதாக குறிப்பிட்டு சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய சேவைகள்அமைச்சர்பவித்திராவன்னியாராச்சிகையொப்பமிட்டுள்ளார்.

## கொரோனா பரவுவதைக் கட்டுப்படுத்த நடத்தை முக்கியம் என்கிறார் மைத்திரி



எமது நடத்தையின் ஊடாக மாத்திரமே கொரோனா வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்த முடியும். நாம் ஒவ்வொருவரும் தனிப்பட்ட வகையில் பொறுப்புணர்வுடன் செயற்படுவதன் ஊடாக இந்தச் சவாலை வெற்றிகொள்ள முடியும் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருக்கிறார்.

இதுகுறித்து நேற்று (ஞாயிற்றுக்கிழமை) அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளவை வருமாறு:

உலகம் முழுவதும் பரவி, தற்போது இலங்கையிலும் பரவ ஆரம்பித்திருக்கும் கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

அதன்படி தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான அரசின் செயற்திட்டங்களுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதுடன் சுகாதார அமைச்சு மற்றும் சுகாதார சேவையாளகளின் ஆலோசனைகளைப் பின்பற்றி நடக்கவேண்டும்.

அதேபோன்று முப்படையினர், பொலிஸார் உள்ளிட்ட அரசாங்க அதிகாரிகளால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

இன்னமும் இந்தத் தொற்றுநோயின் பாரதூரத்தன்மையைப் புரிந்துகொள்ளாமல் சில தரப்பினர் செயற்பட்டு வருகின்றமையை அவதானிக்க முடிகிறது.

எமது நடத்தையின் ஊடாக மாத்திரமே வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்த முடியும். நாம்

ஒவ்வொருவரும் தனிப்பட்ட வகையில் பொறுப்புணர்வுடன் செயற்படுவதன் ஊடாக இந்தச் சவாலை வெற்றிகொள்ள முடியும். – என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை




20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

இல.10 மாநகர சபை புதிய கட்டத் தொகுதி, கஸ்தூரியார் விதி யாழ்ப்பாணம்.

021 222 3536

நெல்லியடியில் – இல, 01, பெற்றோல் செற்லேன், நெல்லியடி, 076 443 1576

சாவகச்சேரி – இல.01 NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.03.2020 இல் வெளியிடப்பெற்றது.